மாவட்டத்திற்குரிய கொறடா அவர்கள் கேட்ட கேள்வி. இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இரண்டு பேருந்துகள் அங்கு இயங்குவதாகச் சொல்கின்றார். அவர், தனிக் கேள்வி போட்டால் இதுபோன்ற கேள்விகளுக்கு பதில் சரியாகக் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

ஜவுளிச் சந்தை

***1717—திரு. V.P. கந்தசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சோமனூரில் புதியதாக ஜவுளிச் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முத்தமிழறிஞர், என் தெய்வம் கலைஞர் அவர்களின் நினைவிடம் அமைக்க ரூ.39 கோடி நிதி ஒதுக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சூலூர் தொகுதி, சோமனூரில் புதிதாக ஜவுளிச் சந்தை அமைத்திட இதுவரை தொழில் முதலீட்டாளர்களிடமிருந்து கோரிக்கை எதுவும் பெறப்படாததால் இப்பொருள் தொடர்பான முன்மொழிவுகள் எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.*

2021 செப்டம்பர் 2]

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு காலை வணக்கத்தை இந்த நேரத்திலே உரித்தாக்குகிறேன். சூலூர் தொகுதியில் இரண்டாவது முறையாக 32,000 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்ய அல்லும்பகலும் அயராது உழைத்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், கொறடா அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும், சூலூர் தொகுதி மக்கள் அனைவருக்கும், கூட்டணிக் கட்சியினுடைய அத்தனை பொறுப்பாளர்களுக்கும் முதற்கண் இந்த நேரத்தில் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் அவர்களுடைய துணைவியார் திருமதி விஜயலெட்சுமி அம்மையார் அவர்கள் நேற்றையதினம் மறைவுற்றதற்கு எங்களுடைய ஆழ்ந்த இரங்கலை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட சோமனூர், கருமத்தம்பட்டி, வாகனராயர்பாளையம், சுல்தான்பேட்டை பகுதிகளில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் விசைத்தறிகள் இயங்குகின்றன. அதேபோல வலம்புச்சேரி, சோமனூர், வாகனராயர்பாளையத்தில் கிட்டத்தட்ட 5,000 கைத்தறி நெசவாளர்கள் வாழ்கிறார்கள். இவர்களுடைய உற்பத்தியை ஏஜென்சியின் மூலமாக, இடைத்தரகர்கள் மூலமாக விற்கின்ற காரணத்தால் அவர்களுக்கு உரிய வருமானம் கிடைப்பதில்லை. எனவே, அங்கு ஜவுளிச் சந்தை அமைத்தால், அந்தப் பகுதியிலே உற்பத்தியாளர்கள் வருமானத்தை நேரடியாக பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களும் இதற்கு மேலான இசைவைத் தெரிவித்து, அங்கே ஜவுளிச் சந்தையை நீங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதி, சோமனூர் என்பது கோவை

மாவட்டத்தைச் சேர்ந்தது. கோவை மாவட்டத்தில் நிறைய ஜவுளிச் சந்தைகள் இருக்கின்றன. 2019-ல் கடந்த கால அரசால் ஒரு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சூலூர் தொகுதி, சோமனூரில் புதிதாக ஜவுளிச் சந்தை அமைத்திட தொழில் முதலீட்டாளர்கள் முன்வந்தால் நிச்சயமாக அதனைப் பரிசீலித்து, ஜவுளிச் சந்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'செய்யும் தொழிலைச் சீர்தூக்கி பார்க்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை' என்பதைப்போல, இது ஒப்பற்ற தொழில். உடலை வருத்தி, இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். எனவே, அவர்கள் மேன்மையடைய, அதிகமான வருமானத்தை ஈட்டுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களும் சோமனூரிலே ஜவுளிச் சந்தை அமைத்துக் கொடுத்தால் அவர்கள் நேரடியாக வருமானம் பெறுவார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்தில் இந்தத் தொழிலுக்கு வலுவூட்டக்கூடிய அளவுக்கு 750 யூனிட் மின்சாரத்தை இலவசமாகக் கொடுத்து இந்த விசைத்தறித் தொழிலைப் பாதுகாத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இங்கேயிருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு மாதம் 250 யூனிட் மின்சாரத்தைக் கொடுத்து கைத்தறித் தொழிலையும் பாதுகாத்தார்கள். 'ஆடையில்லாத மனிதன் அரை மனிதன்' என்று கூறுவார்கள், அரை மனிதனை முழு மனிதனாக்கக்கூடிய இந்தத் தொழிலுக்குப் புத்துயிரூட்டக்கூடிய அளவுக்கு நீங்கள் தயவுசெய்து சோமனூரிலே ஜவுளிச் சந்தையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை எங்கள் சார்பாக வேண்டி, விரும்பிக் கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில், கிட்டத்தட்ட 10 வருடங்கள் ஆட்சி*

2021 செப்டம்பர் 2]

நடத்தினார்கள். அவர்கள் கோரிக்கை வைக்கும்போது இப்போது நிஜமாகவே எங்களுக்கு சந்தோஷமாகத்தான் இருக்கிறது. முக்கியமாக, நெசவாளர்களுக்கு எது செய்தாலும் கலைஞர் அவர்கள் இருக்கின்றபோதுதான், அவர்களுடைய ஆட்சியில்தான் செய்தார்கள். உலகத்திலேயே, தமிழ்நாட்டில் இப்போது ஒரு நம்பிக்கை வந்துவிட்டது. தமிழக முதலமைச்சராக தளபதி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நிச்சயமாக நடக்கும் என்ற ஒரு நம்பிக்கையோடு நீங்கள் இருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக, நாங்கள் செய்வோம். அதற்குத் தேவையானவற்றை உங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், 2019–ல், ஒரு ஜவுளிக் கொள்கையைக் கொண்டு வந்தீர்கள். வில்லங்கம் இல்லாத இடங்களைத் தொழில்முனைவோர்களிடமிருந்து பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை. எல்லோரும் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: அதேமாதிரி, திட்ட மதிப்பில்– project cost–25 சதவிகிதம் தமிழக அரசால் வழங்கப்படும். அதிகபட்சமாக ரூ.10 கோடி. அரசு மற்றும் தனியார் நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தை மேற்கொள்வதால், PPP model– Public Private Partnership–ல் செயல்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஜவுளிச் சந்தைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசாணை எதுவும் வெளியிடப்படவில்லை. கடந்த ஆட்சியில் இந்தத் திட்டத்திற்காக நிதி எதுவும் ஒதுக்கப்பெறவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைக் கேட்டு, நிச்சயமாக, அந்த இடத்தில் ஜவுளிச் சந்தை வருவதற்கு நாங்கள் முயற்சி எடுப்போம் என்று சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோமனூர் ஜவுளிச் சந்தை என்பது, சூலூர் சட்டமன்றத் தொகுதிக்கு மட்டுமல்ல, அருகில் இருக்கின்ற பல்லடம், அவினாசி மற்றும் அன்னூர் போன்ற அனைத்துப் பகுதிகளில் இருக்கின்ற சிறு விசைத்தறியாளர்களுக்காகவும்

கேட்கப்படுகின்றது. பல ஆண்டுகளாக அது கிடப்பிலே இருக்கின்றது. 2011 ஆம் ஆண்டு வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆட்சிக்கு வந்தவர்களால் அது நிறைவேற்றப்படவில்லை. மீண்டும், 2016 ஆம் ஆண்டும் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆட்சிக்கு வந்தவர்களால் அது நிறைவேற்றப்படவில்லை. சூலூரில் இடைத் தேர்தல் நடைபெற்றபோதும் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அப்போதும் அது நிறைவேற்றப்படவில்லை. இச்சந்தை சிறு விசைத்தறியாளர்களுக்கு பயன்படக்கூடியது. பெரு விசைத்தறியாளர்கள் டெல்லி, மும்பை போன்ற பகுதிகளில் வியாபாரம் செய்துகொள்கிறார்கள் அல்லது வெளி மாநிலங்களில் இருக்கின்ற சந்தைகளுக்குச் சென்று வியாபாரம் செய்துகொள்கிறார்கள். ஆனால், சிறு விசைத்தறியாளர்கள்தான் இதிலே பாதிக்கப்படுகின்றார்கள். சோமனூரைச் சுற்றியிருக்கின்ற, பக்கத்தில் இருக்கின்ற மாவட்டங்களில் அதிகப்படியான விசைத்தறிகள் இருக்கின்றன. எனவே, சோமனூர் ஜவுளிச் சந்தை என்பது மிக முக்கியம் என்பதை நான் இந்த நேரத்திலே உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பகுதிகளில் சந்தைப்படுத்த முடியாமல் தடுமாறுகின்ற சிறு விசைத்தறியாளர்கள், ஒரு இலட்சம் ரூபாய் வரை கடன் வாங்கியிருந்தால், அக்கடனைத் தள்ளுபடி செய்வதற்கும் அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கோரிக்கையை வைத்து, நடக்கும் என்ற நம்பிக்கையோடு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை வந்துவிட்டது. அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக்கூறி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று உறுதி கூறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி, மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.